## 128. யுத்தத்தில் வல்லவர் நம்தேவன்

### பல்லவி

யுத்தத்தில் வல்லவர் நம்தேவன்
ஜெயம் கொடுப்பதில் நல்ல தேவன்
யேகோவா நிசியே போற்றிடுவோம்
எந்நாளும் வெற்றி கொடி ஏற்றிடுவார்

### சரணங்கள்

1. உமக்கு நிகர் யாருமில்லை
உமக்கு ஒப்பானவர் ஒருவரில்லை
உம்மிடத்தில் எதிர்த்து நின்றோர் எல்லாம்
இடம் தெரியாமல் போனார்களே
- யுத்தத்தில்

2. பார்வோனை அவன் சேனைகளை
தம்புயபலத்தால் கலங்கடித்தார்
குதிரைகளையும் இரதங்களையும்
செங்கடலில் புதைத்துபோட்டார்
- யுத்தத்தில்

3. இஸ்ரவேலுக்கு எதிர்த்து நின்ற
எரிகோ பயங்கர கோட்டையும்
தனது வல்லமையால் உடைத்தெரிந்த
சர்வ வல்லமையுள்ளவரே
- யுத்தத்தில்